**மே – 21**

# TNPSC துளிகள்

- இலண்டன் நகர தேவாலயத்தின் முதல் பெண் பிஷப்பாக சாராஹ் முல்லால்லி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலண்டன் நகர தேவாலயத்தின் மூன்றாவது மூத்த மதகுரு ஆவார். முல்லால்லி சர்வதேச செவிலியர் தினத்தன்று (ஃபுளோரென்ஸ் நைட்டிங்கேளின் பிறந்த நாள்) இலண்டனின் புனித பால் தேவாலயத்தில் 133-வது பிஷப்பாக நியமிக்கப்பட்டார். இந்நியமனம் பிஷப் முல்லால்லி முன்பு வகித்த வந்த செவிலியர் பதவியின் எதிரொலிப்பாகக் கருதப்படுகிறது.
- பெருமைமிகு ஹியூகோ விருதுகளுக்கு, தன்னை "பங்க் தலித் பெண்" எனக் கூறிக் கொள்ளும் மிமி மொண்டல் இந்தியாவிலிருந்து முதன் முறையாக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இவ்விருதானது அறிவியல் புனைவு/கற்பனையில் (Science fiction or fantasy) சிறந்த எழுத்துப் பணிக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் விருது ஆகும். இவருக்கு இவ்விருதானது சிறப்பான தொடர்புடைய வேலைகள் (Best Related works) பிரிவில் வழங்கப்பட்டது.
  - இந்த ஆண்டு "Luminescent Threads Connections to Octavia E Butler" எனும் அறிவியல் புனைவுப் புத்தகத்தின் இணை ஆசிரியராகப் பணியாற்றியமைக்காக மொண்டல் இவ்விருதிற்கு பரிந்துரைக்கப்பட்டார்.
- இந்த ஆண்டிற்கான கால்பந்து வீரர் விருதிற்கு பிரான்சு நாட்டின் நெய்மர் பெயர் பாரிசில் நடைபெற்ற விழாவில் அறிவிக்கப்பட்டது.
- தாய்லாந்து நாட்டின் பாங்காக்கில் நடைபெற்ற 14 வயதுக்குட்பட்டோருக்கான ITF ஆசியன் டென்னிஸ் சேம்பியன்ஷிப் போட்டியில் உதித் கோகோய் வெற்றி பெற்றுள்ளார்.
- டெல்லியின் I.P.எக்ஸ்டென்சன் பகுதியிலுள்ள மிலன் விஹார் கூட்டுறவு சங்கத்தில் 140 kWp ஆற்றல் கொண்ட சூரியஒளி ஒளி மின்னழுத்த (Photovoltaic) நிலையத்தை டெல்லி முதல்வர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கி வைத்தார். முதல் முறையாக இந்த நிலையங்கள் ரெஸ்கோ மாதிரியில் (RESCO model) நிறுவப்பட்டுள்ளன.
  - RESCO – (Renewable Energy service Company) - புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் சேவை நிறுவனம்.
  - இந்த நிலையமானது டெல்லி அரசின் மின்சாரத் துறை (Department power) மற்றும் இந்திரப்பிரஸ்தா மின் உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டிணைவால் நிறுவப்பட்டது.
- வடகிழக்குப் பகுதியின் பாதுகாவலர் என பிரபலமாகக் கருதப்படும் அஸ்ஸாம் ரைஃபிள்ஸின் (Assam Rifles) 20-வது தலைவராக (Director General) லெப்டினன்ட் ஜெனரல் சுஹ்தீப் சங்வான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.
- வன விலங்கு புகைப்படவியலாளரான திரு.லத்திகா நாத் தன்னுடைய "மறைந்துள்ள இந்தியா" (Hidden India) எனும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இது காபி டேபிள் என்ற புத்தக வகையைச் சார்ந்ததாகும். பெரிய அளவிலான விலையுயர்ந்த புத்தகமான இதன் விற்பனையில் கிடைக்கும் வருமானத்தில் பகுதியளவு தொகையானது, வனவிலங்கு SOS யானை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மையத்திற்கு வழங்கப்படும். இவ்வுதவியின் நோக்கமானது இந்தியாவிலுள்ள யானைகளின் பாதுகாப்பை ஊக்குவித்தலாகும்.

- டெல்லியின் சுப்ரோடோ பூங்காவில் அமைந்துள்ள விமானப்படையின் மேற்குத் தலைமையகம் மானுடவியல் மற்றும் பேரிடர் நிவாரணம் மீதான கருத்தரங்கை நடத்தியது. இக்கருத்தரங்கின் நோக்கமானது இந்தியாவின் வடக்கு பகுதிகளில் மானுடவியல் மற்றும் பேரிடர் நிவாரணம் ஆகியவற்றை சமாளிப்பதற்கான திறனான நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்துவதற்காக நடத்தப்படுகிறது.
- முன்னாள் BCCI தலைவரான ஷஷாங்க் மனோகர், மற்றொரு இரண்டாண்டு காலத்திற்கு சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் தற்சார்புடைய தலைவராக செயல்பட உள்ளார். இவர் சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகக் குழுவினரின் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திரு.மனோகர் சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் முதல் தற்சார்புடைய தலைவராக 2016ல் பதவியேற்றார் .
    - தேர்தல் நடைமுறைகளின் படி, ICC (International Cricket Council) தலைவர்கள் (Directors) ஒவ்வொருவரும் ஒரு நபரை உறுப்பினராக நியமிக்கலாம். அந்த நபர்கள் தற்போதைய அல்லது இதற்கு முந்தைய ICC இயக்குநராக இருக்க வேண்டும்.

# தேசியச் செய்திகள்

## வர்த்தகத் தீர்வுகளுக்கான தலைமை இயக்குநரகம்

- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் வர்த்தகத் துறையில் (Department of Commerce) வர்த்தகத் தீர்வுகளுக்கான தலைமை இயக்குநரகம் என்ற பதவியை உருவாக்குவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- இது தொடர்பாக, இந்திய அரசு (அரசு நடவடிக்கைகள் ஒதுக்கீடு) விதிகள் 1961ல் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.
- விலைபொருட்களை பதுக்கி வைத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள், குறிப்பிட்ட பொருட்கள் மீது இறக்குமதி வரியை விதித்தல், பாதுகாப்பு நடவடிக்கைகள் உட்பட அனைத்து வர்த்தக குறைதீர்ப்பு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான உச்சபட்ச தேசிய அளவிலான ஆணையமாக இது செயல்படும்.
- பதுக்கல் எதிர்ப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநரகம், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநரகம் (DGS) மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் (QR) ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு ஒரே தனித்த அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## யுனெஸ்கோ – இதழியலாளர்களுக்கான சர்வதேச மன்றம்

- தெற்காசிய நாடுகளின் குடிமக்கள், மே 2017 முதல் ஏப்ரல் 2018 வரையிலான காலகட்டத்தில் 97 முறைக்கும் மேலாக இணைய வசதி தடையைச் சந்தித்துள்ளதாக சமீபத்தில் யுனெஸ்கோவினால் வெளியிடப்பட்ட இதழியலாளர்களுக்கான சர்வதேச மன்றத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.
- இந்தியா மட்டும் 82 முறையும், பாகிஸ்தான் 12 முறையும், ஆப்கானிஸ்தான், வங்க தேசம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் ஒருமுறையும் இந்த இணைய வசதி

தடையை சந்தித்துள்ளன.

- ஜம்மு காஷ்மீர் மாநிலம் நாட்டில் அமல்படுத்தப்பட்ட இணைய வசதித் தடையில் பாதியளவை சந்தித்திருக்கிறது.
- உலக முழுவதும் இணைய வசதித் தடை அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுக் காட்டும் இந்த அறிக்கை, ஊடகத் துறையின் சுதந்திரம் மற்றும் வெளிப்படுத்தும் தன்மை (Expressions) ஆகியவற்றிற்கு ஒரு பிரச்சினையாகவும் இந்த தடை உள்ளது எனவும் தெரிவிக்கிறது.
- பெரும்பாலான இத்தடைகள் வன்முறையுடன் கூடிய பொதுமக்களின் எதிர்ப்பைத் தடுப்பதற்கான முன்கூட்டிய செயல்பாடுகளாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## ஐ.நா. உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்

- ஐ.நா. உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகளின் படி இந்தியப் பொருளாதாரமானது 2018-2019 ஆம் நிதி ஆண்டில் 7.6% வளர்ச்சியைக் காண உள்ளது. இந்த வளர்ச்சியானது, இந்தியாவை உலகளவில் வேகமாக வளரும் பொருளாதாரமாக உருவாக்குகிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2017-2018 மற்றும் 2018-2019 நிதியாண்டுகளில் முறையே 7.5% மற்றும் 7.6% ஆக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது.
- இவ்வறிக்கையின் படி உலகப் பொருளாதாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 3.2%-ஐ அடையும். இந்த அளவானது டிசம்பர் 2017-ல் குறிப்பிடப்பட்ட அளவைவிட முறையே 0.2% மற்றும் 0.1% அதிகரித்துள்ளது.
- இவ்வறிக்கையின்படி சீனாவின் பொருளாதாரம் படிப்படியாக 2017ல் 6.9% லிருந்து 2018ல் 6.5% ஆகவும் 2019ல் 6.3% ஆகவும் இருக்கும்.
- இந்த அறிக்கையானது ஐ.நா.வின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UN/DESA), ஐ.நா.வின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டிற்கான மாநாடு (UNCTAD) மற்றும் ஐ.நா.வின் மண்டலக் குழுக்கள் ஆகியவற்றின் கூட்டுத் தயாரிப்பாகும்.

## IFSC வங்கியியல் நிறுவனங்கள்

- சர்வதேச நிதியியல் சேவைகள் மையங்களில் (International Financial Services Centres - IFSC) வங்கியியல் கிளைகளை (International Banking Unit - IBU) வங்கிகள் அமைப்பதற்கான வரைமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி மாற்றியமைத்துள்ளது.




- இந்த வங்கியியல் கிளைகள் சர்வதேச நிதியியல் சேவை மைய வங்கியியல் கிளைகள் என அழைக்கப்படுகின்றது.
- இந்த மாற்றியமைக்கப்பட்ட வரைமுறைகளின் படி தாய் வங்கியானது அதன் வங்கியியல் கிளைகளுக்கு (IBU) குறைந்த பட்சம் 20 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது அதற்கு இணையான வேற்று நாட்டு பணத்தை அனைத்து நேரங்களிலும் வழங்கி நிர்வகிக்க வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டுள்ளது.
- இருப்பினும், IBUவின் வெளிப்பாடுகளுடன் (Exposures) சேர்த்து குறைந்தபட்ச பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறை மூலதனமானது தாய் வங்கியின் அளவில் நடப்பு செயல்பாட்டு அடிப்படையில் (on-going basis) நிர்வகிக்கப்பட வேண்டும்.
- பொருளாதாரத் தேவை ஏற்படும் பொழுது IBUவிற்கு மூலதனம் / பணம் வடிவிலான நிதியியல் உதவியை அதிகப்படுத்துவதற்கான, Letter of comfort எனும் ஆவணத்தை தாய் வங்கி வழங்க வேண்டும்.
- மத்திய அரசு, IFSCஐ, குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் குஜராத் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நகரம் எனும் பெயர் கொண்டு அமைத்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ஆர்செனிக் உணர்வி மற்றும் வெளியேற்று ஊடகம்

- இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் தனியார் நிறுவனத்துடன் கூட்டிணைந்து, நீரில் ஆர்செனிக்கின் அளவை கண்டறியவும் அதை நீக்கவும் ஆர்செனிக் உணர்வி மற்றும் வெளியேற்றும் ஊடகத்தை உருவாகியுள்ளது. இந்த ஊடகம் நீரைப் பாதுகாப்பானதாக மாற்றுவதுடன் வீடுகளில் பயன்படுத்தப்படக் கூடியதாகவும் உள்ளது.
- உலக சுகாதார நிறுவனத்தால் அனுமதியளிக்கப்பட்ட ஆர்செனிக் அளவானது நிலத்தடி நீருக்கு 0.1 மில்லி கிராம்/லிட்டர் ஆகும். இந்தியாவில், இந்த அளவு சமீபத்தில் இந்திய தர நிர்ணய ஆணையத்தால் (Bureau of Indian Standards -BIS) 0.05 மில்லி கிராம் /லிட்டர் இருந்து 0.01 மில்லி கிராம் /லிட்டர் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஆர்செனிக், அதன் கனிம வடிவில் அதிக நச்சுத் தன்மையைக் கொண்டிருக்கும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## லலித்கலா அகாடமியின் தலைவர்

- குடியரசுத் தலைவர் திரு.இராம்நாத் கோவிந்த், உத்தம் பச்சர்னே என்பவரை லலித்கலா அகாடமியின் முழுநேர தலைவராக நியமித்துள்ளார்.



- இவர் பதவியேற்ற தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு தலைவர் பதவியில் நீடிப்பார்.
- இதற்கு முன்னர், மத்திய கலாச்சாரத் துறையில் இணைச் செயலாளராக (கல்வி) பணியாற்றி வரும் திரு.ML ஸ்ரீவஸ்தவா அவர்கள் மார்ச் 2018ல் லலித்கலா அகாடமியின் இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- உத்தம் பச்சர்னே தேசிய லலித்கலா விருது (1985) மஹாராஷ்டிரா கவுரவ் புரஸ்கார் விருது (1985), இளையோர் தேசிய விருது (1986) மற்றும் ஜீவன் கவுரவ் புரஸ்கார் விருது (2017) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.
- நடப்பில் இவர்,
    - கோவாவிலுள்ள லலித்கலா அகாடமியின் ஆலோசனைக் குழு உறுப்பினர்.
    - PL தேஷ் பாண்டே மாநில லலித்கலா அகாடமியில் ஆலோசனைக் குழு உறுப்பினர் மற்றும் ஜன்சேவா சஹாகரி வங்கியின் போரிவாலி கிளையின் இயக்குநர்.
- இந்தியாவின் கலைகளைப் பற்றிய புரிதலை நாட்டிற்குள்ளேயும், நாட்டிற்கு வெளியேயும் ஊக்குவித்தல் மற்றும் பரப்புதல் ஆகிய பணியை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமே லலித்கலா அகாடமி ஆகும்.
- கலைகளுக்கான தேசிய அகாடமி எனவும் அழைக்கப்படும் இந்த நிறுவனம், மத்திய கலாச்சாரத் துறையால் நிதியளிக்கப்படும் தன்னாட்சி அதிகாரமுடைய நிறுவனமாகும். இது 1954 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

## ஸ்வர மௌலி விருது

- மெல்லிசை ராணி லதா மங்கேஸ்கர் அவர்கள், மும்பையில் சங்கராச்சார்யா வித்யா நரசிம்ம பாரதி சுவாமிகளால் ஸ்வர மவுலி பட்டம் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார்.



- பழம்பெரும் பாடகியான இவர் தன்னுடைய எழுபது ஆண்டுகளுக்கும் மேலான இசைப் பயணத்தில் நன்மதிப்பிற்கான பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். மூன்று தேசிய விருதுகளும் இவற்றுள் அடங்கும்.
- நாட்டின் மிகப்பெரிய உயரிய விருதான பாரத் ரத்னா லதா மங்கேஸ்கர் அவர்களுக்கு 2001 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. MS சுப்புலட்சுமி அவர்களுக்குப் பிறகு இவ்விருதைப் பெறும் இரண்டாவது பாடகி லதா மங்கேஸ்கர் ஆவார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச அருங்காட்சியக தினம் – மே - 18

- சமூகத்தின் வளர்ச்சிக்கு அருங்காட்சியகம் எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகம் முழுவதும் சர்வதேச அருங்காட்சியக தினம் மே 18 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- 2018 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "அருங்காட்சியகங்கள் மற்றும் உயர் தொலைத் தொடர்பு: புதிய அணுமுறைகள் மற்றும் புதிய மக்கள்".
- அருங்காட்சியகங்களின் சர்வதேச சங்கத்தால் இத்தினம் 1977 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

- அருங்காட்சியகங்களின் சர்வதேச சங்கமானது 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டின் பாரீசில் அமைந்துள்ளது.

- - - - - - - - - - - - - - -